# செப்டம்பர் – 25 – செவ்வாய்

**புனித சியோலட பிரிக்**

**மாசற்ற வழியில் நடப்போர் பேறுபெற்றோர்: ஆண்டவர் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர்.**
**திபா. 119:1**

## முதல் வாசகம் : நீதி மொழிகள் 21 : 1 – 6, 10 - 13

மன்னவன் மனம் ஆண்டவரின் கைக்குள் அடங்கியிருக்கிறது. வாய்க்கால் நீரைப்போல அவர் அதைத் தம்விருப்பப்படி திருப்பி விடுகிறார். மனிதருடைய நடத்தையெல்லாம் அவர் பார்வையில் குற்றமற்றதாய்த் தோன்றலாம். ஆனால் ஆண்டவர் அவர் உள்ளெண்ணத்தைச் சீர்தூக்கிப் பார்க்கிறார். பலிசெலுத்து வதைவிட நேர்மையாகவும் நியாயமாகவும் நடப்பதே ஆண்டவருக்கு உவப்பளிக்கும். மேட்டிமையான பார்வை, இறுமாப்புக்கொண்ட உள்ளம் - இவை பொல்லாரிடம் பளிச்சென்று காணப்படும் பாவங்கள். திட்டமிட்டு ஊக்கத்துடன் உழைப்பவரிடம் செல்வம் சேரும் என்பது திண்ணம் பதற்றத்துடன் வேலைசெய்பவர் பற்றாக்குறையில் இருப்பார். ஒருவர் பொய் பேசிச் சேர்க்கும் பொருள், காற்றாய்ப் பறந்துவிடும் அவரது உயிரையும் அது வாங்கிவிடும். பொல்லார் மனம் தீமை செய்வதில் நாட்டங்கொள்ளும் தமக்கு அடுத்திருப்பாரை அவர்கள் கனிவுடன் பார்ப்பதும் இல்லை. ஏளனம் செய்வோரை அடிக்கும்போது அதைக்காணும் பேதையராவது படிப்பினை பெறுவர் உணர்வுள்ளவருக்கு அறிவு புகட்டும்போது அவர் மேலும் அறிவுடையவராவார். நீதிமிகு இறைவன் பொல்லாருடைய வீட்டைக் கவனித்துக் கொண்டிருக்கிறார் அவர்களைத் தீச்செயல் காரணமாகத் தூக்கி எறிந்து அழித்துவிடுகிறார். ஏழை கூக்குரலிடும்போது எவன் காதைப் பொத்திக்கொள்கிறானோ, அவன் தானே உதவிக்காக மன்றாடும்போது எவரும் அவனுக்குச் செவி கொடுக்கமாட்டார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உம் கட்டனைகள் காட்டும் நெறியில்
என்னை நடத்தும்

## நற்செய்தி : லூக்கா 8 : 19 - 21

அக்காலத்தில் இயேசுவின் தாயும் சகோதரர்களும் அவரிடம் வந்தார்கள். ஆனால் மக்கள் திரளாக இருந்த காரணத்தால் அவரை அணுகமுடியவில்லை. ”உம்தாயும், சகோதரர்களும் உம்மைப் பார்க்க விரும்பி வெளியே நின்று கொண்டிருக் கிறார்கள்” என்று அவருக்கு அறிவித்தார்கள். அவர் அவர்களைப் பார்த்து, ”இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி செயல்படு கிறவர்களே என்தாயும் என்சகோதரர்களும் ஆவார்கள்” என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு தன்னுடைய உறவு முறையைப்பற்றி பேசுகின்றார். இரத்த உறவை விட விடுதலை அளிக்கின்ற வாழ்வு தருகின்ற இறையாட்சி உறவு தான் தனக்கும் மரியாவுக்கும் இடையே இருப்பது என்பதை இயேசு இங்கு வெளிப்படுத்துகின்றார். “யார் என் தாய் ? யார் என் சகோதர்”? என்ற இயேசுவின் கேள்வியை எவ்வாறு புரிந்துக் கொள்வது? இயேசு தன்னுடைய தாயை உதறித்தள்ளுகிறார் என்று புரிந்து கொள்வதை விட, அவர் தன் தாயை ஒரு புதிய உயரத்திற்கு எடுத்துச்செல்கின்றார், என்றே புரிந்து கொள்ள வேண்டும். இயேசு தன்னுடைய மூன்றாண்டுக் கால பணிவாழ்வில் இறையரசு மற்றும் இறைவார்த்தை, சம்பந்தப்பட்ட உறவிற்குத் தான் மிக முக்கியத்துவம் கொடுத்தார். இரத்தம் சம்மந்தப்பட்ட உறவிற்கு அவ்வளவு முக்கியத்துவம் தரவில்லை. ஆனால் மரியாவைப் பொறுத்த மட்டில் இரத்த உறவும், இறைவார்த்தை உறவும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாத்தாக இருந்தது. இது இரு சிந்தனைகளை முன் வைக்கிறது. முதலாவதாக இயேசுவுக்கும், மரியாவுக்கும் இடையேயான இறைவார்த்தை உறவு, இரத்த உறவை விட ஆழமாக இருந்தது. இரண்டாவதாக, இயேசுவால் அழைக்கப்பட்டவர்களை அவரைப் போல தங்களது அழைப்பு வாழ்வில் இரத்த உறவுக்கல்ல, மாறாக இறையாட்சி, மற்றும் இறை வார்த்தை சம்பந்தப்பட்ட உறவுக்கே முக்கியத்துவம் கொடுத்து வாழ அழைக்கப்படுகிறார்கள். நமது இலட்சியப் பணிக்கு நமது உறவினர்களும், குடும்பமும் தடையாக இருக்கிறது என்பதை நாம் உணர்ந்தோமென்றால் அவற்றை நிராகரிக்கும் மனத்துணிச்சல் நம்மிடம் உள்ளதா? என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க இன்றைய நற்செய்தி நமக்கு அழைப்பு விடுகிறது.